**1 ஜீன் 2017**

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கான ஒரு அழைப்பு: உடனடியாக காணாமற்போனோருக்கான அலுவலகத்தை ஸ்தாபிக்கவும்

இலங்கை அரசாங்கமானது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தன்னுடைய பிரஜைகளுக்கு அவர்களுடைய காணாமற்போக்கப்பட்ட மற்றும் தொலைந்துபோன அன்புக்குரியவர்களைத் தேடுகின்றமை குறித்து அளித்த முக்கியமான வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றமை தொடர்பிலான செயலாற்றாத் தன்மையினைக் குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது மிகுந்த வருத்தத்தினை வெளியிடுகின்றது. செயலாற்றுகையினைக் கோரி பாதிக்கப்பட்டவர்களுடைய தொடர்ச்சியான போராட்டங்கள் உள்ளடங்கலாக பல்வேறு அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களுடைய கோரிக்கைகள் கவனிக்கப்படாதனவாகவே உள்ளன. காணாமற்போனோருக்கான அலுவலகத்தை ஸ்தாபித்தல் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலை குற்றமாக்குதல் உள்ளடங்கலாக 2015 இல் செய்யப்பட்ட இலட்சிய வாக்குறுதிகள் இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியனவாகவே உள்ளன.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல்கள் மற்றும் தொலைந்து போன நபர்கள் குறித்து விசாரிப்பதற்கான நிரந்தரமானதும், சுயாதீனமானதுமான முதலாவது பொறிமுறையினை ஸ்தாபிப்பதற்கான சட்டவாக்கமானது 2016 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்டது. சட்டவாக்கச் செயன்முறையிலே காணப்பட்ட குறைபாடுகளை கருத்திற் கொள்ளாது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது இச் சட்டவாக்கத்தினை கடந்த காலத்திலிருந்து விடுபடுவதற்கு மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு பதிலளிப்பதற்கான ஒரு உண்மையான வாய்ப்பென்ற ரீதியில் வரவேற்றது. சட்டவாக்கம் ஆக்கப்பட்டு ஒன்பது மாதங்களுக்கு மேல் கடந்துள்ள நிலையிலும் காணாமற்போனோருக்கான அலுவலகமும் ஒரு மழுப்பல் பொறிமுறையாகவே இருப்பது குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் ஏமாற்றமடைகின்றது. மேலும் அரசாங்கமானது காணாமற்போனோருக்கான அலுவலகத்தினை ஸ்தாபிப்பதற்கு மாறாக காணாமற்போனோருக்கான அலுவலகமானது அதன் ஆணையினை அடைவதற்குத் தேவையான ஒப்பந்தங்களினை மேற்கொள்வதற்குக் காணப்படுகின்ற தகைமையினைக் குறைப்பதற்கான ஒரு வரைவுச் சட்டவாக்கத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது என்பதனைக் குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது மேலும் கவலையடைகின்றது. இத் திருத்தமானது காணாமற்போனோருக்கான அலுவலகமானது சுதந்திரமான மற்றும் வினைத்திறனான நிறுவனமாக செயலாற்றுகின்றமையில் சாத்தியமான ரீதியில் தடையினை ஏற்படுத்தும். காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றலும்) (திருத்தம்) சட்டமூலமானது 2017 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 7 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதற்கென தற்போது பட்டியலிடப்பட்டுள்ளதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்திற்கு அறியப்படுத்தப்பட்டது. அதன் அடிப்படையிலே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது அதன் முன்னைய அழைப்புக்களை மீண்டுமாய் விடுப்பதுடன் காணாமற்போனோருக்கான அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும், காணாமற்போனோருக்கான அலுவலகத்திற்கு சுயாதீனமான மற்றும் அனுபவம் வாய்ந்த தனிநபர்களை நியமிக்குமாறும், காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் வினைத்திறனான செயலாற்றுகைக்கு அவசியமான வளங்கள் மற்றும் உதவியினை வழங்குமாறும் மற்றும் தன்னுடைய அரசியலமைப்பு சார் கடப்பாடுகளைப் பூர்த்தி செய்யுமாறு கோரியும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினை வலியுறுத்துகின்றது. இச்சட்டவாக்கத்திற்கு கொண்டு வரப்படுகின்ற

எந்தவொரு புதிய திருத்தமும் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதாயிருத்தல் வேண்டும் என்பதுடன் காணாமற்போனோருக்கான அலுவலகத்தின் நோக்கங்களினை பாழ் செய்வதாக அமையக்கூடாது.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதல்கள் மற்றும் தொலைந்து போன நபர்கள் என்பன பல தசாப்தங்களாக இலங்கையில் தொடர்ச்சியாக நிலவி வருகின்ற பிரச்சினைகளாகும். முன்னைய அரசாங்கங்கள் பல ஆணைக்குழுக்களை நியமித்திருந்த போதிலும் அவை இப்பிரச்சினைகள் தொடர்பில் தொடர்ச்சியாக நடவடிக்கைகளினை மேற்கொள்ளவில்லை அல்லது சிறிய அளவிலேயே மேற்கொண்டன. பாதிக்கப்பட்டவர்களுக்கு தவறான எதிர்பார்ப்புக்களை வழங்கிய மற்றும் அவர்களை மீளவும் வேதனைக்குள்ளாக்கிய முயற்சிகள் உட்பட பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையினையும் நீதியினையும் வழங்கத் தவறிய அரசின் பல முயற்சிகள் தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையமானது வியாக்கியானங்களை வெளியிட்டிருந்தது. அத்தகைய முயற்சிகள் பாதிக்கப்பட்டவர்களுடைய கௌரவத்திற்கு நிந்தையினை ஏற்படுத்தியதுடன், தாமதங்களும் செயலாற்றாமையும் தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான கலாசாரத்தினை மேலும் பெருக்கியுள்ளது. ஜனாதிபதி சிறிசேன அண்மையில் கூறிய கூற்றில் சுட்டிக்காட்டியதன் படி இன்னொரு குழு அமைக்கப்படின் அதுவும் தவறானதொன்றாகவே அமையும் என்பதனை மேற்கூறப்பட்ட விடயங்கள் நினைவுபடுத்துகின்றன. மேலும் இது, நிறைவேற்று ஜனாதிபதி அவருடைய ஆயிரக்கணக்கான பிரஜைகளுக்கு அவர்களுடைய காணாமற்போக்கப்பட்ட அன்புக்குரியவர்களைப் பற்றி விடை காணுவதற்கு உதவுவதற்கு மாறாக குறிப்பின் மூலமாகவோ அல்லது செய்யாமையின் மூலமாகவோ மௌனத்தினையும், தண்டனையிலிருந்து விடுபடுவதற்கான கலாசாரத்தினையும் தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்ய விரும்புகின்றார் என்ற ஒரு எண்ணத்தினைத் தோற்றுவிக்கின்றது.

அரச மற்றும் அரச சார்பற்றவர்களால் தசாப்த காலங்களாக புரியப்பட்ட தவறுகள் இலங்கை முழுவதுமுள்ள பிரஜைகளிடையே ஆழமானதொரு தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதுடன் வன்முறை மரபொன்று தோன்றுதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது. இச் செயலாற்றாமையும் அக்கறையின்மையுமானது, உண்மை, நீதி மற்றும் நல்லிணக்கத்திற்கான சீர்த்திருத்தங்களை வரவேற்பதற்கான இவ் விசேடித்த வாய்ப்பினை அரசாங்கம் வீணடிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்ற விமர்சகர்களுடைய கைகளை தற்போது பலப்படுத்துவதாக அமையும். யுத்தம் நிறைவு பெற்று எட்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் மற்றும் ''நல்லாட்சி அரசாங்கம்'' ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையில் அரசாங்கம் அளித்த மிகவும் முக்கியமான வாக்குறுதிகளில் சிலவற்றினை நிறைவேற்றுவதற்கான முக்கியமான தருணமாக இது அமைகின்றது. ஜனாதிபதி சிறிசேன தற்போது செயலாற்ற வேண்டும்!

காணாமற்போக்கப்பட்டோருக்கான அலுவலகம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை பின்வரும் வலைத்தளங்களில் கண்டறியலாம்: www.cpalanka.org மற்றும் www.tjsrilanka.org